# 27-12-2024 செய்தி

## வீர பாலகர்

- சீக்கியர்களின் 10-வது குரு கோவிந்த் சிங்கின் இளைய மகன்கள் பாபா சோராவார் சிங் (9), பாபா பதே சிங் (6) ஆகியோர் முகலாய படை வீரர்களால் கடத்தப்பட்டனர்.
- அவர்களை மதம் மாறச் சொல்லி நவாப் வாசிர் கான் நிர்பந்தித்தார். வீரமிக்க இரு சிறுவர்களும் மதம் மாற மறுத்துவிட்டனர். இதன் காரணமாக 1704-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி இரு சிறுவர்களையும் உயிரோடு புதைத்து சமாதி கட்டப்பட்டது.
- அவர்களின் நினைவாக கடந்த 2022-ம் ஆண்டு முதல் வீர பாலகர் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி வீரம், புதுமை, அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, கலைத் துறைகளில் சாதித்த 17 சிறுவர், சிறுமியருக்கு விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன. அவர்களுக்கு வாழ்த்துகளை பிரதமர் மோடி தெரிவித்திருக்கிறார்.

## இந்திய பொருளாதார புரட்சியின் கிங் மன்மோகன் சிங்

**பயோ - டேட்டா**

பெயர் : மன்மோகன் சிங், 92

பிறந்த தேதி : 1932 செப், 26

பிறந்த இடம் : பஞ்சாப் காஹ் (தற்போதைய பாக்..)

படிப்பு : எம்.ஏ.., பொருளாதாரம், ஆகஸ்போர்டு பல்கலையில் பொருளாதாரத்தில் டாக்டர் பட்டம்

**முத்தான திட்டங்கள்**

- தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்
- மகளிருக்கு எதிரான வன்செயல்களைத் தடுக்க 2005ல் சட்டம்
- தகவல் அறியும் உரிமைச்சட்டம் -2005
- வனஉரிமைகள் அங்கீகரிப்புச் சட்டம்
- 11 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 புதிய ஐ.ஐ.டி., கள், 7 ஐ.ஐ.எம்., கள், 30 மத்திய பல்கலைகளைக் கொண்டுவரத்திட்டம்
- 2008 அக்டோபர் 22ல் சந்திரயான்-1 ஏவப்பட்டது
- ஆக்கபூர்வப் பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்த அமெரிக்காவுடன் ஒப்பந்தம்
- இலவச கட்டாய கல்வி உரிமை சட்டம் - 2009.

**உதவித்தொகை**

- லண்டன் புனித ஜான் கல்லூரி, மன்மோகன் சிங் பெயரில், பிஎச்.டி., படிப்புக்கு கல்வி உதவித்தொகை வழங்குகிறது.

**வாழ்க்கை பயணம்**

- 1932 செப், 26 : தற்போதைய பாகிஸ்தானில் உள்ள பஞ்சாபின் காஹ் பகுதியில் பிறந்தார்.
- 1947 : இந்தியா – பாக்., பிரிவினையின் போது இந்தியாவின் அமிர்தசரஸ் நகருக்கு இடம்பெயர்ந்தார்.
- 1957-1959 : பஞ்சாப் பல்கலையில் பேராசிரியர் பணி
- 1958 : குர்ஷரண் கவுரை திருமணம் செய்தார்: மூன்று மகள்கள் உள்ளனர்.
- 1966-1969: வரை ஐ.நா., வர்த்தகம், வளர்ச்சி கழகத்தில் பணியாற்றினார்
- 1969-1971 : டில்லி பல்கலை பேராசிரியராக பணி
- 1972-1976 : நாட்டின் தலைமை பொருளாதார ஆலோசகர்
- 1982-1985 : இந்திய ரிசர்வ் வங்கி கவர்னர்
- 1985 : இந்திய பொருளாதார கூட்டமைப்பின் தலைவர்
- 1985-1987 : இந்திய திட்டக்கமிஷன் துணை தலைவர்
- 1990-1991 : பிரதமரின் பொருளாதார ஆலோசகர்

SURESH'

- 1991 : யு.ஜி.சி., தலைவர்
- 1991 : அசாமில் இருந்து ராஜ்யசபாவுக்கு தேர்வு
- 1995 : ராஜ்யசபாவுக்கு தேர்வு
- 1991-1996 : நரசிம்ம ராவ் அமைச்சரவையில் மத்திய நிதியமைச்சர்
- 2001 : ராஜ்யசபாவுக்கு தேர்வு
- 1998-2004 : வாஜ்பாயி ஆட்சியின் போது ராஜ்யசபாவில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்
- 2004-2014 : நாட்டின் 13 வது பிரதமராக 10 ஆண்டுகள் பதவி வகித்தார்
- 2024 ஏப் .., 3 : ராஜ்யசபா பதவிக்காலம் நிறைவு : அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவிப்பு.

**துளிகள்:**

- இவரது ஆட்சியில் 2006-2007-ல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி..) **10.08** சதவீதத்தை எட்டியது. இதுவே இந்தியாவின் அதிகபட்ச பொருளாதார வளர்ச்சி.
- சிறப்பு பொருளாதார மண்டலங்கள் சட்டம்-2005 என்பதை கொண்டு வந்தார்.
- கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் விதமாக 100 நாள் வேலை திட்டத்தை (மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டம்) கொண்டு வந்தார்.
- இந்தியா-அமெரிக்கா அணு ஆயுத சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- தகவல் அறியும் உரிமைச்சட்டம்
- அனைவருக்கும் கட்டாய இலவச கல்வி.

## பிரம்மபுத்திரா நதியில் உலகின் மிகப்பெரிய அணை

**11 லட்சம் கோடியில் சீனா அதிரடி திட்டம்**

- வற்றாத ஜீவநதிகளில் ஒன்று பிரம்மபுத்திரா
- திபெத்திலுள்ள கயிலாய மலையில் 'ஸாங்-போ' என்ற பெயரில் உருவாகிறது.
- இந்திய எல்லைக்குள் அருணாசலபிரதேசத்திற்குள் நுழைந்ததும் இதற்கு பிரம்மபுத்திரா என்று பெயர்.
- அசாம் மாநிலத்தை கடந்து வங்கதேசத்திற்கு நுழைகிறது.
- கடைசியாக வங்காள விரிகுடாக் கடலில் கலக்கின்றது.

**இந்தியாவின் கவலைகள்**

- பிரம்மபுத்திரா நதி மொத்தமும் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் போய்விடும் அபாயம்.
- வற்றாத ஜீவ நதியான பிரம்மபுத்திராவில் சீனா திறந்து விட்டால் மட்டும் தண்ணீர் ஓடும்.
- இதனால், நதியின் மீன் இனங்கள் அடியோடு அழிந்து விடும்.
- அருணாச்சல், அசாம் மாநிலங்கள் பிரம்மபுத்திரா நதியின் நீரை நம்பித்தான் உள்ளன.
- நீரின்றி நதி வறண்டால் அந்த மாநில மக்கள், பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்படும்.
- அதே போல் ஒரே நேரத்தில் மொத்த தண்ணீரையும் சீனா திறந்துவிட்டால் அசாம், அருணாச்சல் மாநிலங்களோடு வங்க தேசமும் வெள்ளத்தில் அழிந்துவிடும்.
- இன்றைய நிலவரப்படி உலகின் மிகப்பெரிய அணையான த்ரீ கோர்ஜஸ் அணையும் சீனாவில்தான் உள்ளது. இங்கு ஆண்டுக்கு 8,800 கோடி யூனிட் மின்சாரம் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தியாகிறது. புதிதாக பிரம்மபுத்திராவில் கட்டப்படும் அணை மூலம் ஆண்டுக்கு 30 ஆயிரம் கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம்.

**பிரம்மபுத்திரா நதி**

- மொத்த நீளம் - 2800 கி.மீ
- சராசரியான நீர் வெளியேற்றம் விநாடிக்கு - 7,00,000 கன அடி
- பாயும் நாடுகள் - சீனா, இந்தியா, வங்கதேசம்

**அணை எங்கே அமைகிறது**

- இந்திய எல்லைக்குள் அருணாச்சல பிரதேசத்துக்குள் நுழைவதற்கு முன் பிரம்மபுத்திரா நதி யூ வடிவில் திரும்புகிறது. இந்த திருப்பத்தில் மலைப்பகுதியில் 2 ஆயிரம் மீட்டர் ஆழ பெரிய பள்ளத்தாக்கு உள்ளது. இந்த பள்ளத்தாக்கில் தான் சீனா உலகின் மிகப்பெரிய அணையை கட்ட திட்டமிட்டுள்ளது.

SURESH'